சொல்கிறேன், எங்களுடைய திருமங்கலம் தொகுதியிலே புளியங்குளம் என்ற கிராமத்திலே தகுதி மீறிய குடும்பங்களைச் சேர்த்து அவர்களுக்கு இந்த உதவி போய் இருக்கிற காரணத்தினாலே—ஏன் அப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து தேர்ந்தெடுக்கவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், திட்ட அலுவலரிடமும் தெரிவித்தும்கூட இதுவரை நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலே, உடனடியாக இது போன்ற நேர்வுகளில் இனியும் இப்படி நிகழாத வண்ணம் நடவடிக்கை எடுக்கும்படியும், அப்படி சட்டமன்ற உறுப்பினரை அழைக்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் குடும்பங்களைப் பற்றி மறுபரிசீலனை செய்வதற்கும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு சட்டப்பேரவை உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான், ஐ.ஆர்.டி.பி. என்ற அந்தத் திட்டத்தினுடைய பயன் பெறுபவர்களுடைய பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று தெளிவாக உத்தரவிட்டிருக்கிறது. அதனை பி.டி.ஓ., நிச்சயம் நிறைவேற்றியிருக்க வேண்டும். அப்படி எந்த அதிகாரியாவது தவறு செய்திருந்தால், நிச்சயமாக உரிய நடவடிக்கை, துரிதமாக எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது குற்றம் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) அதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படும்.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. திட்டத்தில் மாவட்டவாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும், அதில் குறிப்பாக, காமராஜர் மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமான விவரம்தான் இருக்கிறது. மாவட்டவாரியாக இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதற்குத் தகுந்த தகவலை அளிக்கிறேன்.

தஞ்சை மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைக் கருவி.

80—(*வினா எண் 2459) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சை (டையாலிசிஸ்) கருவி பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1986 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டையலைசர் கருவி ஏற்கெனவே வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே டையலைசிஸ் கருவி வாங்கப்பட்டிருப்பது உண்மைதான். இருந்தாலும் பல ஆண்டுகளாக அது பொருத்தப்படவில்லையென்பதை அரசு அறியுமா? அதைப் பொருத்தாததினுடைய காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் பற்றிக் கொஞ்சம் தகராறு இருந்தது. அதெல்லாம் சரி செய்யப்பட்டு, 12-5-1986 முதல் செயல்பட்டு வருகிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரைச் சுத்தம் செய்கின்ற கருவி வாங்கிவிட்டார்களா? அந்த டையலைசிஸ் கருவி இப்பொழுது பயன்படுத்தப்படுகிறதா? மேலும் புற்றுநோய்க்காக பயன்படுத்துகிற Deep X-ray Therapy இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, Haemo Dialysis கருவி இப்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தண்ணீர் பற்றிய பிரச்னை இப்பொழுது இல்லை. சுத்தம் செய்வது நடந்து கொண்டிருக்கிறது. மற்றைய கேள்வியைத் தனியாகக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

நோயாளிகளுக்கு மலிவு விலையில் எக்ஸ்ரே படம்.

81—(*வினா எண் 4948) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயாளிகளுக்கு ஒரு ரூபாய் செலவில் எக்ஸ்ரே படம் எடுக்கும் தொழில் நுட்பக் கருவி ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உபயோகத்திற்கு வந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நமது மருத்துவமனைகளில் அதை பயன் படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.